# ஆளுநர் உரை மிகுந்த ஏமாற்றமளிக்கிறது!

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!... முதல் பக்கத் தொடர்ச்சி

இப்படி கடந்த திராவிட மாடல் அரசின் திட்டங்கள் மேல் ஸ்டிக்கர் ஒட்டிவிட்டு, இவர்கள் ஆட்சியின் தோல்விக்கான பழியைத் தூக்கி மீண்டும் திராவிட மாடல் அரசின் மீது, தி.மு.க. அரசின் மீதே இவர்கள் போட்டிருக்கிறார்கள். மிகுந்த காழ்ப்புணர்ச்சி யுடன் இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது.



**புதுடெல்லியில் நிதி ஆயோக் கூட்டத்தில் நம் பெருமை!**

இரண்டு, மூன்று இடங்களில் ஆளுநர் உரையில் `சென்ற அரசினுடைய நிர்வாகம் சரியில்லை’ என்று குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள், சொல்லியிருக்கிறார்கள். இதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். அப்படி ஆட்சி நிர்வாகம் சரியில்லாமல் இருந்திருந்தால், எப்படி இவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிற மாதிரி பல திட்டங்களை எங்கள் அரசு நிறைவேற்றிக் காட்டியிருக்கும்?

உதாரணத்துக்கு, சென்ற வாரம் நம் முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குப்போய் நிதி ஆயோக் கூட்டத்தில் நம் தமிழ்நாடு கடந்த ஐந்து ஆண்டுகளில் எவ்வளவு திட்டங்களைச் செய்திருக்கிறோம், எவ்வளவு சாதனைகளைச் செய்திருக்கிறோம், இன்றைக்கு இந்தியாவிலேயே பொருளாதாரத்தில் இரண்டாவது இடத்தில் இருக்கிறோம் என்று பெருமை பேசியிருக்கிறார். அதெல்லாம் அவருடைய ஒரு மாத ஆட்சியினுடைய சாதனைகளா? கிடையாது.

**காப்பி பேஸ்ட் அரசு!**

முன்னாள் முதலமைச்சர், எங்களுடைய தலைவர், எங்களுடைய திராவிட மாடல் அரசினுடைய சாதனைகளைத்தான் போய் டெல்லியில் நம் முதலமைச்சர் அவர்கள் வாசித்துவிட்டு வந்திருக்கிறார். அந்த வகையில், மொத்த முரண்பாடுகளுடைய உருவமாகத்தான் இன்றைக்கு இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. இந்த அரசு அமைந்து 38 நாட்கள் ஆகிவிட்டன. இவர்களுக்கென்று சொல்வதற்குச் சாதனைகள் எதுவுமே இல்லை. இவர்கள் சொல்வது, அறிவிப்பது எல்லாமே எங்களுடைய திராவிட மாடல் அரசின் திட்டங்கள்தான், அதனுடைய நீட்சிதான். இந்த அரசு வெறும் ஒரு காப்பி பேஸ்ட் அரசாக, ஸ்டிக்கர் அரசாகத் தான் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது.

ஆட்சிக்கு வருவதற்கு முன்பு தேர்தல் வாக்குறுதியில் பல்வேறு திட்டங்களை இவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டங்களை எல்லாம் எப்படி நிறைவேற்றப் போகிறார்கள் என்று ஒரு ப்ளூ பிரிண்ட்டாக, ஒரு முன்னோட்டமாக, ஒரு ட்ரைலராகத் தான் இன்றைக்கு இந்த உரை இருக்கும் என்று நாங்கள் நினைத்தோம். மக்களும் அதை எதிர்பார்த்தார்கள்.

இவர்களுடைய அறிவிப்புகளை எப்படி நிறைவேற்றப் போகிறார்கள் என்று இந்த ஆளுநர் உரையில் இடம் பெற வேண்டும் என்று நாங்கள் எல்லாம் நினைத்தோம், ஆனால் ஆளுநர் உரை மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது.

**ஒரு வெற்று அறிக்கை!**

சொன்ன வாக்குறுதிகளில் இருந்து எப்படி எல்லாம், என்ன காரணம் எல்லாம் சொல்லி எஸ்கேப் ஆகிவிடலாம் என்பதற்காக நேற்று முன்தினம் அதற்கு ஒரு முன்னோட்டமாக ‘வெள்ளை அறிக்கை’ என்று சொல்லி ஒரு வெற்று அறிக்கையை வெளியிட்டார்கள். அதைப்பற்றி நேற்று எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் நிதி அமைச்சர், அண்ணன் தங்கம் தென்னரசு அவர்கள் சரியான பதிலடியைக் கொடுத்திருக்கிறார். அதற்கு கேள்விகளும் கேட்டிருக்கிறார், அதற்கு எந்த பதிலும் இது வரைக்கும் இல்லை.

இப்படி மின்வெட்டு, விவசாயிகள் போராட்டம், இது எல்லாத்துக்கும் மேல் சட்டம் ஒழுங்கு இன்றைக்கு எந்த அளவுக்கு மோசமாக இருக்கிறது என்று நான் உங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

ஒவ்வொரு நாளும் தொலைக்காட்சிகளில் நீங்களே ஒளிபரப்பிக் கொண்டு இருக்கிறீர்கள். ஒரு சின்ன புள்ளிவிவரத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன். கடந்த ஒரு மாதத்தில் மட்டும், சுமார் 175 பாலியல் வன்கொடுமைகள், 65 கொலைகள், 4 சாதிய ஆணவப் படுகொலைகள் தமிழ்நாட்டில் நடந்திருக்கின்றன. இன்றைக்கு இருக்கக்கூடிய முதலமைச்சர் தேர்தல் பிரச்சாரத்தின் போது எப்படியெல்லாம் டயலாக் பேசினார், வீர வசனம் பேசினார் என்று தமிழ்நாட்டு மக்கள் பார்த்தார்கள், நீங்கள் அத்தனை பேரும் பார்த்திருப்பீர்கள்.

என்ன சொன்னார்? ‘பச்சை பிள்ளைகள், படிக்கிற பிள்ளைகள், சின்ன பொண்ணுங்க, வீட்டில் இருக்கிற பொண்ணுங்க, வேலைக்குப் போகிற பொண்ணுங்க, இவர்கள் எல்லாருக்கும் நடக்கிற கொடுமையைச் சொல்ல முடியவில்லையே சி.எம். சார்’ என்று எங்கள் தலைவரைப் பார்த்து, அப்போது இருக்கக்கூடிய முதலமைச்சரைப் பார்த்து, இன்றைய முதலமைச்சர் அவர்கள் வீர வசனம் பேசினார். இன்றைக்கு அவர்களுடைய ஆட்சியில் தமிழ்நாட்டில் நடக்கக்கூடிய இந்த கொடுமைகள் எல்லாம், குற்றங்கள் எல்லாம் பார்க்கும் போது, ஒரு திரைப்படத்தில் வரும் அல்லவா, ‘சார், கண்ணாடியைப் பார்த்துப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள் சார்’ என்கிறஅந்த நிலைமையை இன்றைக்கு முதலமைச்சர் ஏற்படுத்தி இருக்கிறார். அதுவும் வேலியே பயிரை மேய்ந்த கதையாக இன்றைக்கு நடக்கக்கூடிய அனைத்து குற்றங்களிலும் யார் ஈடுபடுகிறார்கள் என்று பார்த்தீர்கள் என்றால், ஆளுங்கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள், அவர்களின் கட்சியினரே அந்த குற்றங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**சட்டம் ஒழுங்கு?**

சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்றும் ஆளுநர் உரையில் எந்தவிதமான ஒரு குறிப்பும் கிடையாது. அதே போல, ஏற்கனவே நன்றாக இருக்கக்கூடிய திட்டங்களைக் கெடுப்பதை, எதிர்க்கட்சிகள் நாங்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்க முடியாது.

நேற்று கூட நீங்கள் பார்த்திருப்பீர்கள், எங்கள் திராவிட மாடல் அரசு கொண்டு வந்த ஒரு திட்டம், அரசின் முத்திரை திட்டமான ‘நான் முதல்வன்’ திட்டத்தை முடக்கி இருக்கிறார்கள், பெயரை மாற்றி இருக்கிறார்கள். அது எங்களின் தலைவர் பெயரில் இருக்கக்கூடிய திட்டமும் கிடையாது, டாக்டர் கலைஞருடைய பெயரில் இருக்கக்கூடிய ஒரு திட்டமும் கிடையாது, ஒரு நல்ல திட்டம். ஏன் நீக்கி இருக்கிறார்கள் என்றால், ‘நான் முதல்வன்’ என்று சொன்னாலே, ‘முதல்வன்’ என்று சொன்னாலே மக்களுக்கு எங்கள் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பெயர்தான் மக்களுக்கு ஞாபகம் வரும் என்று.

அப்படிப்பட்ட ஒரு குறுகிய எண்ணத்தோடு அந்த திட்டத்தின் பெயரையே நீக்கி இருக்கிறார்கள். அந்த திட்டத்தின் அச்சீவ்மென்ட்ஸ் வீடியோஸ் எல்லாம் சோசியல் மீடியாவில் இருந்து நீக்கி இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் இன்றைக்கு ஒவ்வொரு நாளும் பல்வேறு பிரச்சினைகள். ஆனால் எத்தனை பிரச்சினை நடந்து கொண்டு இருந்தாலும், ‘இன்றைக்கு முதலமைச்சர் கோட் சூட் போட்டு இருக்கிறார்’, ‘இன்றைக்கு முதலமைச்சர் வேட்டி சட்டை கட்டி இருக்கிறார்’, ‘இன்றைக்கு முதலமைச்சர் டிபன் பாக்ஸில் லஞ்ச் எடுத்துக்கொண்டு வந்து சாப்பிடுகிறார், கோட்டையிலேயே சாப்பிடுகிறார், அவர் வாயில் அவரே வைத்துச் சாப்பிடுகிறார்’ என்று அவர்கள் கட்சியின் விர்ச்சுவல் அபியூசர்ஸ் (Virtual abusers) எல்லாம் இப்படிப்பட்ட கண்டன்ட்களை ட்ரெண்ட் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் உண்மையான பிரச்சினைகளைப் பற்றி என்றைக்கு நம் முதலமைச்சர் வாயைத் திறப்பார் என்று கேட்பதற்காகத்தான், இன்றைக்கு எதிர்க்கட்சியைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் ‘தயவு செய்து வாயைத் திறங்கள் சிஎம் சார், பதில் சொல்லுங்கள் சி.எம். சார்’ என்பதற்காகத் தான் இன்றைக்கு இந்த பேட்ஜை நாங்கள் அணிந்து கொண்டு வந்திருக்கிறோம். எங்களின் எதிர்ப்பை, எங்களின் எண்ணங்களைத் தெரிவித்து இருக்கிறோம்.

அதுவும் எப்போதாவது பேசுகிற இந்த முதலமைச்சரை பார்த்தீர்கள் என்றால், அப்பொழுதும் தான் முதலமைச்சர் என்பதை மறந்து, இன்னும் பிரச்சார மோடிலேயே பேசிக் கொண்டிருக்கிறார். சி.எம். தான் அப்படி இருக்கிறார் என்று பார்த்தீர்கள் என்றால், அவர்களின் ஒவ்வொரு அமைச்சரும், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களும் முழுக்க முழுக்க ரீல்ஸ் வெறியிலேயே சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். எல்லாமே அவர்களுக்குக் கன்டென்ட். எல்லாமே ரீல்ஸ்தான். இதையெல்லாம் பற்றி முதலமைச்சர் கவலைப்படுகிற மாதிரி துளியும் தெரியவில்லை. அவரின் ஒரே சிந்தனை இந்த ஆட்சியை எப்படி காப்பாற்றிக் கொள்ளப் போகிறோம் என்கிற அந்த கவலையில்தான் அவர் இருக்கிறார்.

‘பீரோ புல்லிங்’ என்று சொல்வார்கள். அது மாதிரி இன்றைக்கு நம் முதலமைச்சர் அவர்கள் அ.தி.மு.கவின் சட்டமன்ற உறுப்பினர்களையெல்லாம் எம்.எல்.ஏ. புல்லிங் செய்துக் கொண்டிருக்கிறார். ஆங்கிலத்தில் ‘பேனிக் பையிங்’ (Panic Buying) என்று ஒரு வார்த்தை இருக்கிறது. திடீரென்று ஒரு பேரிடர் காலமோ, இல்லை ஒரு கடையடைப்போ நடக்கும் போது, மக்கள் எல்லாம் அவசர அவசரமாக சென்று வீட்டிற்குத் தேவையான சாப்பாடு பொருட்கள், வண்டிக்குத் தேவையான பெட்ரோல், டீசல் எல்லாம் போட்டு வைத்துக் கொள்வார்கள். அதற்குப் பெயர் பேனிக் பையிங் என்பார்கள். ஒரு ஆர்டிபிஷியல் டிமாண்ட் கிரியேட் செய்வது.

அது மாதிரி இன்றைக்கு நம் முதலமைச்சர் அவர்கள், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம், ஆட்சி அமைந்த நாளில் இருந்து இன்றைக்கு வரைக்கும் தன் ஆட்சியைப் காப்பாற்றிக் கொள்ள ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரையும் பேனிக் பையிங் செய்துகொண்டிருக்கிறார்.

மாற்றம் மாற்றம் என்று சொல்லிவிட்டு இன்றைக்கு இந்த ஆட்சிக்கு வந்தார்கள். ஆனால் இன்றைக்குப் பொதுமக்கள் என்னவென்று சொல்கிறார்கள்? இது மாற்றம் இல்லை. மாட்டிக்கொண்டோம் நாம் எல்லாம் சேர்ந்து இவர்களிடம் மாட்டிக் கொண்டோம் என்று புலம்ப வைத்திருக்கிறது இன்றைக்கு அமைந்திருக்கக்கூடிய இந்த அரசு. எனவே தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய குழந்தைகள், பெண்கள், விவசாயிகள் என்று யாருடைய பாதுகாப்புக்கும், எந்த ஒரு வலிமையான திட்டங்களும் புதிய ஆளுநர் உரையில் நிச்சயம் இல்லை. அதனால் கடந்த ஆட்சியின் மேல், காழ்ப்புணர்வை மட்டுமே வெளிப்படுத்துகின்ற இந்த ஆளுநர் உரையை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இவ்வாறு பேட்டியளித்த எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்கள் கேள்விக்கு பதிலளித்தார்.

அது வருமாறு:–

**செய்தியாளர்:** *ஆளுநர் உரையை முழுமையாக வாசித்துவிட்டுப் போயிருக்கிறார். தி.மு.க. ஆட்சியின்போது ஆளுநர் பாதியிலேயே கிளம்பிப் போய்விடுவார். இந்த நிகழ்வை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?*

**எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின்:** ஏற்கனவே சொன்ன மாதிரி தான். கடந்த ஐந்து வருடத்தில் ஒரு முறை கூட ஆளுநர் அவர்கள் தி.மு.க. அரசு கொடுத்திருக்கக்கூடிய உரையை முழுமையாகப் படித்ததே கிடையாது. மாற்றம் செய்வார். ஆனால் மாற்றம் செய்யும்போது அப்பொழுது இருந்த எங்கள் முதலமைச்சர் எதிர்ப்பு தெரிவித்து இருக்கிறார். ஆனால் இந்த முறை பார்த்தீர்கள் என்றால், ரொம்ப அபூர்வமாக முழு உரையும் ஒரு வார்த்தை, ஒரு கமா, ஒரு ஃபுல் ஸ்டாப் கூட எடுக்காமல் வாசிக்கும் போதே, உங்களுக்குத் தெரியும். தமிழக ஆட்சியாளர்களுக்கும், தமிழக வெற்றிக் கழகத்தாருக்கும், பா.ஜ.க.விற்கும் ஒரு பெரிய அண்டர்ஸ்டாண்டிங் வந்து விட்டதோ என்கிற சந்தேகம் எங்களுக்கு வந்திருக்கிறது.

**செய்தியாளர்:** *சட்டப்பேரவையில் மரபு மாற்றப்பட்டு, இரண்டு முறை தேசிய கீதம் பாடப்பட்டிருக்கிறது இதை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

**உதயநிதி ஸ்டாலின்:** மிகப்பெரிய ஆச்சரியங்கள், அதிசயங்கள் இப்போது இங்கே நடந்து கொண்டு இருக்கின்றன. மரபு மீறப்பட்டிருக்கிறது. தி.மு.க ஆட்சியில் எப்போதுமே தமிழ்த்தாய் வாழ்த்து மட்டும் தான் முதலில் இசைக்கப்படும். முடியும் போது ஆளுநர் கிளம்புவதற்கு முன்பு தேசிய கீதம் ஒளிபரப்பப்படும். ஆனால் இந்த முறை இரண்டு முறை தேசிய கீதத்தை ஒளிபரப்பி இருக்கிறார்கள் என்றால், மீண்டும் சொல்கிறேன், பா.ஜ.கவும், இப்போது இருக்கக்கூடிய ஆட்சியாளர்களும், ஒரு அண்டர்ஸ்டாண்டிங்கிற்கு வந்திருக்கிறார்கள் என்றுதான் அர்த்தம்.

இவ்வாறு அவர் பேட்டியில் கூறினார்.

---

### தமிழகத்தில் புதிதாக பொறுப்பேற்ற த.வெ.க. ஆட்சியில்

## பிரேக் பிடிக்காத அரசு பேருந்தை ஓட்டச் சொல்லி நிர்ப்பந்திக்கும் அதிகாரிகள்!

### பயணிகளுக்கும், எங்களுக்கும் பாதுகாப்பில்லை - பணிமனை முன்பு டிரைவர்கள், கண்டக்டர்கள் தர்ணா!

*சென்னை, ஜூன் 19 -*

*தமிழகத்தில் புதிதாக பொறுப் பேற்ற தவெக ஆட்சியில் கோவை யில் பிரேக் பிடிக்காத அரசு பேருந்தை ஓட்ட சொல்லி அதிகாரி கள் நிர்பந்திப்பதாக சுங்கம் 1 பணிமனை முன்பு தற்காலிக டிரைவர்கள் மற்றும் கண்டக்டர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். இதில் 50க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு பழுதான அரசு பேருந்தை முறையாக பராமரிக்க வேண்டும், பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என கோஷம் எழுப்பினர். பின்னர் தரையில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.*

*இது குறித்து தற்காலிக டிரைவர் கவுதமன் என்பவர் கூறியதாவது :*

*இந்த பணிமனையில் தற்காலிக டிரைவர்கள் மற்றும் கண்டக்டர்கள் 50 பேர் உள்ளோம். கடந்த 3 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றி வரும் எங்களை தமிழக அரசு பணி நிரந்தரம் செய்ய வேண்டும். நேற்று காந்திபுரம் டூ கரடிமடை செல்லும் தடம் எண் 35 என்ற பேருந்தை இயக்கி சென்றேன். அப்போது, மாதம்பட்டி அடுத்த குப்பனூர் செல்லும் வழியில் பேருந்து பிரேக் பெயிலியர் ஆனது. நான் உடனே உதவி பொறியாளர் ராமசாமி என்ப வரை செல்போனில் தொடர்பு கொண்டு தகவல் கூறினேன்.*

*அதற்கு அவர் உனக்கு முன்பு ஓட்டிய டிரைவர் அதே பேருந்தை தானே ஓட்டி சென்றார். அவர் ஏதும் பழுது குறித்து கூறவில்லை. நீ முன் கூட்டியே டிரைவரிடம் கேட்க மாட்டாயா? என அலட் சியமாக பதில் கூறினார். ஒருகட்டத்தில் நீயெல்லாம் தற்காலிக பேருந்து ஓட்டுநர் தானே, எழுதி கொடுத்து விட்டு வேலையை விட்டு போய்விடு என ஏளனமாக பேசினார்.*

*இதேபோல், பணிமனையில் பேருந்து களை பழுதுபார்க்க மெக்கானிக்கும் போதுமான அளவில் இல்லை. அதிகாரிகளின் அலட்சியத்தால் பயணிகளுக்கும், சொற்ப சம்பளத்தில் வேலை பார்க்கும் எங்களுக்கும் உரிய பாது காப்பில்லை. எனவே, இந்த சம்பவம் தொடர்பாக உரிய விசாரணை நடத்த வேண்டும் என்று அவர் கூறினார்.*

---

### ஜூன் 23 வரை

## தமிழ்நாடு சட்டப் பேரவை கூட்டத்தொடர்!

சென்னை, ஜூன் 19 –

தமிழ்நாடு சட்டப் பேரவையின் கூட்டத்தொடர் ஜூன் 23 வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டமன்ற கூட்டம் நேற்று (18.06.2026) ஆளுநர் உரையுடன் தொடங்கியது.

தொடர்ந்து இன்று (வெள்ளியன்று) இரங்கல் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகிறது. அடுத்து ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் தொடங்குகிறது.

சனி, ஞாயிறு விடுமுறைக்குப் பின்னர் 22 ஆம் தேதி திங்களன்று விவாதம் தொடர்ந்து நடைபெறும்.

23-ஆம் தேதி செவ்வாயன்று விவாதம் தொடர்ந்து பின்னர் முதலமைச்சரின் பதிலுரை இடம் பெறும்.

அத்துடன் இக்கூட்டத் தொடர் முடிவடைகிறது.

---

### உலகக் கோப்பை கால்பந்து: காங்கோ அணிக்காக விளையாடிய

## தமிழ் வம்சாவளி வீரர் சாமுவேல் முத்துசாமி!

*டெக்சாஸ். ஜூன் 19 -*

*நடப்பு ஃபிபா உலகக் கோப்பை கால்பந்து தொடரில் காங்கோ அணிக்காக ஸ்டார்டிங் லெவனில் களம் கண்டிருந்தார் தமிழ் வம்சாவளி வீரரான சாமுவேல் முத்துசாமி.*

*அமெரிக்காவின் டெக்சாஸில் உள்ள ஹியூஸ்டனில் ‘கே’ பிரிவில் உள்ள போர்ச்சுகல் மற்றும் காங்கோ அணிகள் இந்த தொடரில் இந்திய நேரப்படி நேற்று இரவு 10.30 மணிக்கு விளையாடின.*

*இந்த ஆட்டத்தில் போர்ச்சுகல் வெல்லும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்த தொடரில் சாம்பியன் படம் வெல்லும் வாய்ப்புள்ள அணிகளில் ஒன்றாக போர்ச்சுகல் இருப்பதாக கால்பந்து ஆர்வலர்கள் கருதுகின்றனர்.*

*இந்த ஆட்டத்தின் ஆறாவது நிமிடத்தில் ஜோவா நெவாஸ், போர்ச்சுகல் அணிக்காக முதல் கோலை பதிவு செய்தார். அதற்கான பதில் கோலை முதல் பாதியின் ஸ்டாப்பேஜ் டைமில் காங்கோ அணி பதிவு செய்தது. காங்கோ அணிக்காக விஸ்ஸா அந்த அற்புதத்தை நிகழ்த்தினார்.*

*காங்கோ அணிக்காக இந்த ஆட்டத்தின் ஸ்டார்டிங் லெவனில் தமிழ் வம்சாவளியை சேர்ந்த சாமுவேல் முத்துசாமி விளையாடினார்.*

*29 வயதான நடுகள வீரரான சாமுவேல் முத்துசாமி பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் பிறந்தவர். இவரது தாய் காங்கோ நாட்டைச் சேர்ந்தவர். தந்தை கரீபியன் தீவுகளில் ஒன்றான குவாதலூப்பைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழ் வம்சாவளி ஆவார். 19ம் நூற்றாண்டில் தமிழகத்தில் இருந்து குவாதலூப்புக்கு இவரது முன்னோர்கள் குடிபெயர்ந்துள்ள னர்.*

*கடந்த 2019 முதல் காங்கோ அணிக்காக சர்வதேச அளவிலான கால்பந்து ஆட்டங்களில் விளையாடி வருகிறார். சுமார் 50க்கும் மேற்பட்ட ஆட்டங்களில் விளையாடிய அனுபவம் கொண்டவர்.*

*கடைசியாக காங்கோ அணி கடந்த 1974 உலகக் கோப்பை தொடரில் பங்கேற்று இருந்தது. அதுதான் அந்த அணியின் முதல் உலகக் கோப்பை தொடர். அதன் பின்னர் சுமார் அரை நூற்றாண்டு காலம் கடந்து நடப்பு உலகக் கோப்பை தொடரில் காங்கோ பங்கேற்றுள்ளது. அதோடு உலகக் கோப்பை வரலாற்றில் காங்கோ அணி முதல் கோலையும் பதிவு செய்தது. அந்த அணியின் வரலாற்று சிறப்புமிக்க இந்த ஆட்டத்தில் சாமுவேல் முத்துசாமி விளையாடினார்.*

*இந்த ஆட்டத்தில் அவருக்கு 5.5 ரேட்டிங் கொடுக்கப்பட்டது.*

